# 19

# ஆபிரகாமின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுதல்

## [4:17ஆ-25]

*ரோமர் 4ல், "ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது (வசனம் 3). நாம் "நமது தகப்பனாகிய ஆபிரகாமின் விசுவாசத்தின் அடிச்சுவடுகளில் நடக்கிறவர்களாய்" இருக்க வேண்டும் என்று நமக்கு அறைகூவல் விடப்பட்டது (வசனம் 12).[1] நான் இவ்வார்த்தைகளை வாசிக்கையில், தனது தகப்பனுடைய அடிச்சுவடுகளில் தனது பாதங்களைப் பதிக்கத் தனது கால்களை அகட்டிவைத்து நடந்து தனது தந்தையைப் பின்பற்றிய ஒரு சிறு பையனைப் பற்றி நான் நினைத்துப் பார்க்கிறேன். எங்கள் மருமகன் டான் லவ்ஜாய் சமீபத்தில் தனது முதல் "தந்தையர்கள் தினத்தை" கொண்டிருந்தார்.[2] எங்கள் மகள் ஆஞ்சி, அவருக்கு ஒரு வாழ்த்து அட்டையைத் தயாரித்திருந்தாள், அதில் டானின் பெரிய ஷூக்களும், அவற்றிற்குப் பின்னால் அவர்களின் மகன் எலிசாவின் சிறிய ஷூக்களும் சித்தரிக்கப்பட்டிருந்தன. அந்தப்படத்தின் கீழ் இருந்த தலைப்பு, "அப்பா, நான் உங்கள் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறேன்" என்றிருந்தது. டான், "அது இனிமையானதாக - மற்றும், சற்றே அச்சுறுத்தக்கூடியதாக - இருந்தது" என்று கூறினார்.*

*"ஆபிரகாமின் விசுவாசத்தின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுதல்" என்பது எதை அர்த்தப்படுத்திற்று? ரோமர் 4ன் கடைசிப்பகுதியில், பவுல் ஆபிரகாமின் விசுவாசத்தினுடைய இயல்பு பற்றிக் கலந்துரையாடினார். ரிச்சர்டு பேட்டி என்பவர், "இங்கு பவுல் தமது எழுத்துக்களில் வேறெவ்விடத்திலும் இல்லாத அளவுக்கு விசுவாச விளக்கம் ஒன்றை முன்வைக்கிறார்.[3] அவரது விளக்கம் கவனக்குறைவாகவோ அல்லது கல்வியியல் வகையிலோ ஏற்படுத்தப்படவில்லை, ஆனால் அது ஆபிரகாமின் விசுவாசத்தின் பண்பு வெளிக்காண்பிக்கப்பட்டதான அவரது பதில்செயல் பற்றிய விவரிப்பாக உள்ளது" என்று எழுதினார்.[4] இந்தப்பாடத்தில் நாம் ஆபிரகாமின் விசுவாசத்தைப் பற்றிப் பவுல் கூறியது என்ன என்று ஆராய்வு செய்வோம். நாம் அதைச் செய்கையில், நீங்களும் நானும் இவ்வகையான விசுவாசத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதைச் சிந்தையில் வைத்துக்கொள்ளுங்கள்.*

### ஆபிரகாமின் விசுவாசம் (4:17ஆ-22)

**தேவனுடைய நபர்த்துவத்தில் விசுவாசம் (வசனம் 17ஆ)**

*எல்லாவற்றிற்கும் முதலாவதாக, நாம் ஆபிரகாம் தேவனுடைய*

*நபர்த்துவத்தில்* கொண்டிருந்த விசுவாசத்தைக் கவனிப்போமாக. நமது வசனப்பகுதியானது 17ம் வசனத்தின் பிற்பகுதியில் இருந்து தொடங்குகிறது. அது ஒரு வாக்கியத்தின் நடுவில் உள்ளது - எனவே நாம் அவ்வாக்கியத்தின் தொடக்கம் முதல் திரும்பிக் காணவேண்டியுள்ளது:

> ஆதலால், சுதந்தரமானது கிருபையினால் உண்டாகிறதாயிருக்கும் படிக்கு அது விசுவாசத்தினாலே வருகிறது; நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்களாகிய சந்ததியாருக்கு மாத்திரமல்ல, நம்மெல்லாருக்கும் தகப்பனாகிய ஆபிரகாமுடைய விசுவாசத்தைச் சார்ந்தவர்களான ஆவிக்குரிய எல்லாச் சந்ததியாருக்கும் அந்த வாக்குத்தத்தம் நிச்சயமா யிருக்கும்படிக்கு அப்படிவருகிறது (வசனம் 16).

16ம் வசனத்தின் கடைசிக்கூற்றிற்குப் பவுல் ஆவிக்குரிய உறுதிப்பாட்டைக் கொடுத்தபின்பு (வசனம் 17அ வைக் காணவும்), அவர் இந்தப்பாடத்திற்கான வசனப்பகுதியின் முதல் வார்த்தைகளைக் கூட்டினார். ஆபிரகாம் "தான் விசுவாசித்தவருமாய் ... இருக்கிற தேவனுக்கு முன்பாக" நம்மெல்லாருக்கும் தகப்பனாக இருக்கிறார் என்று அவர் [பவுல்] கூறினார் (வசனம் 17). "தேவன்" என்ற வார்த்தையை அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள்; ஆபிரகாம் *தேவனை* விசுவாசித்தார்.

இவ்வசனப்பகுதியானது, தேவனைப்பற்றி ஆபிரகாம் விசுவாசித்த இரண்டு சத்தியங்களைக் குறிப்பிடுகிறது: "மரித்தோரை உயிர்ப்பித்து,[5] இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவன்" (வசனம் 17இ, ஈ). "மரித்தோரை உயிர்ப்பித்து" (வசனம் 17ஆ) என்ற இச்சொற்றொடர், சந்தர்ப்பப்பொருளில், ஆபிரகாம் மற்றும் சாராள் ஆகியோரின் "செத்த" சரீரங்களை (வசனம் 19இ) குறிக்கிறது; தேவன் அவர்களின் சரீரங்களை "உயிர்ப்பித்து" அவர்கள் ஒரு மகனைப் பெறக்கூடியவர்கள் ஆக்குவார். அங்கு, ஆபிரகாமின் வாழ்வில் பிற்பாடு, அவர் தமது மகன் ஈசாக்குவைப் பலியிடும்படி அழைக்கப்பட்டதற்கான குறிப்பும்கூட இருக்கலாம் (ஆதியாகமம் 22). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், ஆபிரகாம் "மரித்தோரிலிருந்து மெழுப்பத் தேவன் வல்லவராயிருக்கிறாரெண்ணி"ய காரணத்தினால் அவர் அந்தச்சோதனையை எதிர்கொள்ள முடிந்தது என்று கூறினார் (எபிரெயர் 11:18ஆ). "மரித்தோரை உயிர்ப்பித்து" என்ற சொற்றொடர் இவ்வதிகாரத்தின் கடைசி வசனத்தில் மீண்டும் எதிர்ப்பார்க்கப்படலாம், அது கிறிஸ்து மரித்தோரில் இருந்து உயிர்த்ததைப்பற்றிப் பேசுகிறது (ரோமர் 4:25).

தேவன் மரித்தோரை உயிர்ப்பிக்க *முடியும்* என்று ஆபிரகாம் விசுவாசித்தது குறிப்பிடத்தக்கதாக உள்ளது. தேவன் ஆபிரகாமுக்குத் தரிசனமாகியிருந்தார்; அதைத்தவிர, ஆபிரகாம் கவனித்திருந்த அற்புதம் என்று நாம் எதையும் அறிவ தில்லை. ஏறக்குறைய நிச்சயமாகவே, அவர் மரித்தோரில் இருந்து உயிர்ப் பிக்கப்பட்ட எவரையும் ஒருக்காலும் கண்டிருந்ததில்லை. இருந்தபோதிலும் ஆபிரகாம், தேவன் தேவனாக இருந்தார் - மற்றும் தேவன் விரும்பினால் அவர் மரித்தோரை உயிர்ப்பிக்க முடியும் - என்று விசுவாசித்தார்!

மீண்டுமாக ஆபிரகாம், "இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவருமாயிருக்கிற" தேவனில் விசுவாசம் கொண்டார் (வசனம் 17ஈ). இது தேவன் முன்பு இருந்திராத உலகத்தை இருக்க செய்வதற்குப் பேசிய இடமான

ஆதியாகமம் 1ம் அதிகாரத்தைக் குறிப்பதாக இருக்கலாம். சந்தர்ப்பப்பொருளில் இது அனேகமாக, ஆபிரகாமுக்குத் தரப்பட்ட வாக்குத்தத்தங்களைப் பற்றிப் பேசுவதாக இருக்கலாம். ஆபிரகாமின் மகன் ஈசாக்கு இருக்கவில்லை, ஆனால் அவரை இருக்கும்படி தேவன் அழைத்தார். தேவன் இல்லாதிருந்த மக்களினம் ஒன்றை (இஸ்ரவேல்) இருக்கும்படி அழைத்தார் (ஆதியாகமம் 12:2; 46:3). தேவன், ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியை (கிறிஸ்தவர்களை)யும்கூடக் குறிப்பிட்டார் மற்றும் கடைசியாக, கிறிஸ்துவின் மூலமாக அவர்களை இருக்கிறவர்களாக அவர் அழைத்தார் (கலாத்தியர் 3:29).

ஆபிரகாமைப் பொறுத்தமட்டில், தேவன் ஏதேனும் கூறினார் என்றால், அது செய்யப்பட்டு முடிந்ததாக இருந்தது. ஏதேனும் ஒரு விஷயம் நடக்கும் என்று தேவன் கூறினார் என்றால், அது - எந்தக் கேள்வியுமின்றி - *நடக்கும்.*

ஆபிரகாமின் விசுவாசம், அவர் *தம்மீது* கொண்டதாயிராமல், *தேவன் மீது* கொண்டதாக இருந்தது. ஆபிரகாமின் விசுவாசம் அவரது *விசுவாசமாகக்கூட* இராமல், அவரது கர்த்தர்மீதானதாயிருந்தது. நம்மில் சிலர் கவனமாயிருக்கவில்லை என்றால், நமது விசுவாசத்தின் பெலமே மிகவும் முக்கியமானதென்று நினைக்கத் தொடங்கும் அளவுக்கு கிரியைகளைச் சார்ந்தவர்களாக இருக்கிறோம். விசுவாசம் "பெலவீனமானதாகவோ" (வசனம் 19) அல்லது "பெலமானதாகவோ" (வசனம் 21) இருக்கலாம், மற்றும் நமது விசுவாசம் வளர வேண்டியது அவசியமாக உள்ளது (வசனம் 21ஐக் காணவும்).[6] இருந்தபோதிலும், நீதிமானாக்கப்படுதலைப் பற்றி, நமது விசுவாசத்தின் அளவோ அல்லது பண்போ நமது விசுவாசத்தின் *கவனக்குவிப்பு அளவுக்கு* முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதில்லை. ஒருவேளை, நான் கூறமுயற்சிப்பதைப் புரிந்துகொள்ள ஒரு விவரிப்பு உங்களுக்கு உதவும்.

நீங்கள் கடந்து செல்ல வேண்டியதான ஒரு ஆழமும் அகலமுமான பிளவு ஒன்றிற்கு நீங்கள் வந்து சேர்ந்திருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். மறுபுறம் சென்று சேர்வதற்கான மூன்று அணுகுமுறைகளை காட்சியில் பாருங்கள். நீங்கள் குறுக்காகக் குதிக்க முயற்சி செய்யலாம்; இது சுயத்தில் கொண்டுள்ள விசுவாசத்தைச் சித்தரிக்கக்கூடும். (நீங்கள் செல்ல முயற்சிக்கிறீர்கள், ஆனால் ஐயோ பாவம், பிளவின் ஆழத்தில் விழுந்துவிடுகிறீர்கள்!) இரண்டாவதாக, பள்ளத்தாக்கின் மேலே உறுதியாகக் கட்டப்பட்டுள்ள நீளமான கயிறு ஒன்றைப் பிடித்து அதில் தொங்கி ஊஞ்சலாடி அதைக் கடக்கும் அணுகுமுறை உள்ளது. நீங்கள் கயிற்றின் ஒரு முனையைப் பற்றிக்கொண்டு குறுக்கே ஊசலாடுகிறீர்கள். இந்த முறையானது இரட்டை விசுவாசக் கவனக்குவிப்பாக உள்ளது: அந்தக் கயிறு உங்களைத் தாங்கும் என்று நீங்கள் நம்புகிறீர்கள் மற்றும் உங்கள்மீதும் - அதாவது, நீங்கள் மறுபுறம் பத்திரமாகச் சென்று சேரும்வரையில் அதைப் பற்றிக்கொள்ள முடியும் என்று நீங்கள் நம்பிக்கையாக இருக்கிறீர்கள்.





நீங்கள் ஆழ்ந்து சிந்திக்கும்படியாக நான் விரும்புகிற மூன்றாவது அணுகு முறை என்பது அந்தப் பிளவினூடே உள்ள ஒரு பாலம் பற்றியதாக இருக்கிறது. பிளவைக் கடக்கும்போது அந்தப்பாலம் உங்களைத் தாங்கிக்கொள்ளும் என்று நீங்கள் நம்புவதால், அதன்குறுக்காக நீங்கள் நடந்து செல்லுகிறீர்கள். உங்களின் விசுவாசம் உங்களைத் தாங்குவதில்லை, ஆனால் அந்தப்பாலமே உங்களைத் தாங்குகிறது. ஒருவேளை நீங்கள் தைரியமாகக் கடந்து செல்லலாம், அல்லது ஒரு வேளை நீங்கள் பதட்டத்துடன் கடந்து செல்லலாம். எவ்வகையிலும், உங்கள் விசுவாசத்தின் அளவோ அல்லது பண்போ உங்களைத் தாங்குவதில்லை, ஆனால் அந்தப்பாலமே உங்களைத் தாங்குகிறது.



ஆபிரகாமின் விசுவாசத்தினுடைய கவனக்குவிப்பு, அவர் தம்மீதே கொண்டிருந்ததில்லை என்று வலியுறுத்தவே நான் விரும்புகிறேன். அவர் தம்மீது கொண்டிருந்த விசுவாசமாகக்கூட இருக்கவில்லை. (நாம் காணப்போகிறபடி, ஆபிரகாமின் விசுவாசமானது பூரணப்பட்டநிலையில் இருந்து தொலைவில் இருந்தது.) மாறாக, ஆபிரகாம் *தேவன்மீது* விசுவாசம் கொண்டிருந்தார் (வசனம் 17ஆ). அதுபோலவே நமது விசுவாசத்தின் கவனக்குவிப்பும் தேவன்மீதே இருக்க வேண்டும். நாம் ஆவிக்குரியவகையில் மரித்தவர்களாக இருக்கும்போதுகூட அவர் நமக்கு ஜீவன் தரமுடியும் (எபேசியர் 2:5). ஒருநாளில் அவர், மரித்த நமது உடல்களுக்குப் புதிய ஜீவனை அளிப்பார். மற்றும் நாம் பாவிகளாயிருக்கும்போதுகூட, அவர் நம்மைக் கண்கொண்டு பார்க்கவும் நமது வாழ்வில் உள்ள ஆற்றல்களைக் காணவும், "இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கவும்" முடியும்.

**தேவனுடைய வல்லமையின்மீது விசுவாசம் (வசனங்கள் 18, 19)**

ஆபிரகாமின் விசுவாசம் தேவன்மீது நிலைத்திருந்த காரணத்தால், "உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்'' (ரோமர் 4:18). இவ்வசனத்தை நாம் முழுவதுமாகப் பார்ப்பதற்கு முன்னர், ''நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும் நம்பிக்கையோடே விசுவாசித்தான்'' என்ற சொற்றொடர்மீது நாம் சற்று நேரத்தைச் செலவிடுதல் அவசியமாக உள்ளது (வசனம் 18ஆ).

ரோமருக்கு எழுதிய நிருபத்தில் ''நம்பிக்கை'' என்ற வார்த்தையை இங்குதான் நாம் முதன்முதலாக எதிர்கொள்கிறோம், ஆனால் இதுவே கடைசிமுறையாக இருப்பதில்லை (5:2, 3, 5; 8:20, 24, 25; 12:12; 15:4, 12, 13, 24). "நம்பிக்கை" என்பது *elpis* என்ற வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது, இது "தீர்மானமாக பவுலின்[7] வார்த்தையாகும், ... புதிய ஏற்பாட்டின் வேறு எந்தப் புத்தகத்தைக்காட்டிலும் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் இவ்வார்த்தை மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது."[8] நம்பிக்கை என்பது விசுவாசத்துடன் நெருங்கிய தொடர்புடையதாகும் (எபிரெயர் 11:6), ஆனால் அவை இரண்டும் ஒன்றல்ல. பவுல் இங்கு எழுதிய நம்பிக்கை என்பது *விருப்பத்தையும் எதிர்பார்ப்பையும்*

ஒன்றிணைக்கிறது; நம்பிக்கை ஏற்பட இவ்விரண்டும் தேவைப்படுகிறது.[9] நான் பத்து லட்சம் ரூபாய் வேண்டும் என்று விரும்பலாம்; ஆனால் அதைப்பெறுவேன் என்று நான் எதிர்பார்ப்பதில்லை என்பதால் அது நம்பிக்கையாக இருப்பது இல்லை. தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி சாவுக்கேதுவான ஊசிபோடப்பட்டு இறப்பதை எதிர்பார்த்திருக்கலாம்; ஆனால் அவர் அதை விரும்புவதில்லை, எனவே அதுவும் நம்பிக்கையாவதில்லை. கிறிஸ்துவுக்குள் நாம் நம்பிக்கை கொண்டவர்களாயிருக்கிறோம்: இது விருப்பமும் எதிர்பார்ப்பும் *ஒன்றுகூடிய* நிலையாகும்.

பவுல், "நம்பிக்கைக்கு மேலான நம்பிக்கையில்" விசுவாசம் வைத்தல் பற்றிப் பேசினார்: *பூமிக்குரிய* கருத்தமைவில் இருந்து பார்க்கையில், ஆபிரகாம் தனக்கு ஒரு மகன் இருப்பான் என்ற நம்பிக்கை இல்லாதிருந்தான். அவர் ஒரு மகன் வேண்டுமென்று *விரும்பினார்,* ஆனால் "சரீரம் செத்துப்போன" நிலையில் (ரோமர் 4:19), அவர் ஒரு மகனை எதிர்பார்க்கப் பூமிக்குரிய வகையில் நியாயம் எதுவும் இல்லாதிருந்தது. இருந்தபோதிலும் *பரலோகத்தின்* கருத்தமைவில் இருந்து பார்க்கையில், அவர் திரளான சந்ததியாரைப் பெறுவார் என்று தேவன் உரைத்திருந்தார், எனவே ஆபிரகாம் ஒரு மகனைப்பெற விரும்பியது மாத்திரமின்றி, அதை *எதிர்பார்த்தும் இருந்தார்.* இவ்வித மாகப் பவுல், "நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்" என்று கூறினார் (வசனம் 18). யூஜீன் பீட்டர்ஸன் என்பவர் இதைப் பின்வருமாறு பொழிப்புரை செய்தார்: "எல்லாம் நம்பிக்கையற்று இருந்தபோது, ஆபிரகாம் இருந்தாலும் விசுவாசித்தார் …" (MSG).

"உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, தான் அநேக ஜாதிகளுக்கு [ஆவிக்குரிய மற்றும் மாம்சப்பிரகாரமான] தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை [ஆபிரகாம்] நம்பிக்கையோடே விசுவாசித்தான்" (வசனம் 18). இவ்வசனத்தில் உள்ள "அநேக ஜாதிகளுக்குத் தகப்பன்" என்ற குறிப்பு, ஆதியாகமம் 17:4, 5ல் இருந்து வருகையில், மேற்கோளானது ஆதியாகமம் 15:5ல் இருந்து வருகிறது. அங்கு தேவன் ஆபிரகாமிடத்தில், அவரது சந்ததிகள் வானத்தின் நட்சத்திரங்களைப்போலக் கணக்கற்றிருக்கும் என்று கூறியிருந்தார். இந்த வாக்குத்தத்தம் - நிறைவேற்றப்படக்கூடிய வகை எதுவும் காணப்படாதிருந்தும் இது - உண்மையாகும் என்று ஆபிரகாம் நம்பிக்கை கொண்டிருந்தார்.

உலகத்தின் மக்களுக்கு, இவ்வகையான விசுவாசம் தர்க்கப்பொருத்த மற்றதாக, பகுத்தறிவற்றதாக உள்ளது. இப்படிப்பட்ட விஷயமானது, "உண்மைத்தன்மையுடன் தொடர்பற்று" உள்ளது என்று வலியுறுத்துகின்றனர், அது "உண்மைகளை எதிர்கொள்ளத்தவறுவதில்" இருந்து விளைகிறது என்று அவர்கள் கூறுகின்றனர். அடுத்த வசனமானது, இப்படிப்பட்டது ஆபிரகாமின் விஷயத்தில் உண்மையாயிருக்கவில்லை என்று உறுதிப்படுத்துகிறது: "அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை,[10] அவன் ஏறக்குறைய நூறுவயதுள்ளவனாயிருக்கும்போது, தன் சரீரம் செத்துப்போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான்" (4:19). இவ்வசனத்தை ஆராய்வதில் ஒரு சிரமம் இருத்தல் பற்றி நாம் அறிவது அவசிய மாக உள்ளது:

> *“அவன் தன் சரீரம் செத்துப்போனதாக எண்ணினான்” என்று வாசிப்பதா அல்லது “அவன் தன் சொந்த சரீரம் இப்போது செத்துப்போகவில்லை என்பதாக எண்ணினான்” என்று வாசிப்பதா என்பது பற்றி வசனரீதி யான உறுதியற்ற தன்மை உள்ளது. இவ்விரு வாசிப்புகளும், ஒன்று மற்றொன்றை ஒன்றுமற்றதாக்குகிறது, [ஆயினும்] இவ்விரண்டுமே உறுதிப்படுத்தப்பட்டவையாக, ஒவ்வொன்றும் நல்ல கருத்தைக் கொடுப்பதாக உள்ளது என்பது மனதைக்கவரக் கூடியதாகும். ஒன்றின் விஷயத்தில், ஆபிரகாம் தனது உடலைச்செத்ததாக எண்ணவில்லை, ஏனெனில் தேவன் அதன்மூலமாகத் தமது சித்தத்தை நடப்பிப்பார். இன்னொன்றின் விஷயத்தில் அவர் தமது உடலின் இயலாத்தன்மையை முழுமையும் கணக்கில் எடுத்துக்கொண்டு அதன்மூலமாய்த் தேவன் தமது சித்தத்தை நடப்பிப்பார் என்ற கருத்தைப்பற்றிக் கொண்டிருந்தார்.*[11]

*இவ்வசனத்தை ஒருவர் எவ்வகையில் எடுத்துகொண்டாலும், தொண்ணூற்றொன்பது வயது நிறைந்த ஆபிரகாம் ஒரு மகனைப் பெறுவார் என்று அவரிடத்தில் தேவன் உரைத்தபோது (ஆதியாகமம் 17:1, 16), அவர் பிள்ளைகளுக்குத் தகப்பனாவதைப் பொறுத்தவரையில், தமது சரீரம் “செத்துப்போனது [nekroo என்பதன் ஒரு வடிவம்]” என்ற உண்மையைப் புறக்கணிக்கவில்லை (எபிரெயர் 11:12 உடன் ஒப்பிடவும்). அதுபோலவே அவர் “சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனது [nekroo என்பதன் ஒரு வடிவம்]” என்பதையும் புறக்கணிக்கவில்லை. சாராளின் கர்ப்பம் எப்போதும் “செத்துப்போனதாக” இருந்தது, ஆனால் பிள்ளைகளைப் பெறுதல் என்பதைப் பொறுத்தவரையில், ஆபிரகாமின் சரீரம் “இப்போது” செத்துப்போயிருந்தது. கடந்த நாட்களில் அவரது சரீரம் பிள்ளைகளைப் பெறுதல் என்பதைப் பொறுத்தவரையில் “செத்துப்” போயிருந்ததில்லை (ஆதியாகமம் 16:4அ), ஆனால் இப்போது அது செத்துப்போயிருந்தது.*[12]

*ஆபிரகாம் “உண்மைகளை” கண்டார்: அவரும் சாராளும் சரீரரீதியாகப் பிள்ளைகளைப் பெறக்கூடாதிருந்தனர். அவர் “உண்மையை” எதிர் கொண்டார்: அவர் சந்ததிகளைப் பெறுவதற்குப் பூமிக்குரிய வழியெதுவும் இருக்கவில்லை. இருந்தபோதிலும், அவர் தாமும் சாராளும் ஒரு மகனைப் பெற்றுக்கொள்வோம் என்றும், தமது சந்ததி நட்சத்திரங்களைப் போலவே எண்ணற்றதாக இருக்கும் என்றும் நம்பினார். ஏன்? ஏனென்றால் சரீரப்பிரகாரமான உண்மைகளே எல்லா உண்மைகளுமாக இருப்பதில்லை என்பதை அவர் உணர்ந்தறிந்தார்; உண்மையில் அவைகள் கிடைக்கிற உண்மைகளில் மிகவும் அற்பமுக்கியத்துவம் உடையவையாகும். மற்றும், அவர் இந்த பூமியின் உண்மைநிலையின் இடத்தைக் கைப்பற்றும் உண்மைநிலையொன்று உள்ளது என்று உணர்ந்தறிந்தார்: அது தேவனுடைய உண்மைநிலையாகும். சரீரப்பிரகாரமான உண்மைகளையும் பூமிக்குரிய உண்மை நிலையையும் ஆபிரகாம் புறக்கணிக்கவில்லை, ஆனால் அவர் அவற்றினால் பயமுறுத்தப்படவோ மட்டுப்படுத்தப்படவோ மறுத்து விட்டார். அவர் சர்வவல்லவராகிய தேவனை விசுவாசித்தார், அந்த தேவன் தாம் கூறியதைச் செய்ய வல்லவராயிருக்கிறார் என்று விசுவாசித்தார் (ரோமர் 4:17; ஆதியாகமம் 17:1; லூக்கா 1:37ஆகியவற்றைக் காணவும்).*

*நாம் ஆபிரகாமின் விசுவாசத்தினுடைய அடிச்சுவடுகளில் நடக்கிறவர்களாக இருந்தால், நாம் நம்மைச் சுற்றிமாத்திரமல்ல ஆனால் மேல்நோக்கி - தேவனையும்*

- காணவேண்டும். வாழ்வின் பிரச்சனைகளை நாம் புறக்கணித்துவிடலாகாது, ஆனால் அவற்றினால் மூழ்கடிக்கப்படுவதை நாம் மறுத்துவிட முடியும். நாம் ஒரு *வல்லமையுள்ள* தேவனை, அன்புகூருகிற பிதாவைக் கொண்டுள்ளோமே. எரேமியா "உம்மாலே [தேவனாலே] செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை" என்று கூறினார் (எரேமியா 32:17இ). மரியாளிடத்தில் தூதன், "தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை" என்று கூறினார் (லூக்கா 1:37). நாம், "தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்க" கற்றுக்கொள்ள வேண்டும் (2 கொரிந்தியர் 5:7).

**தேவனுடைய வாக்குத்தத்தங்களில் விசுவாசம் (வசனங்கள் 20, 21)**

ஆபிரகாம் தேவனுடைய வல்லமையின்மீது விசுவாசம் கொண்டதோடு நின்றுவிடவில்லை; அவர் தேவனுடைய வாக்குத்தத்தங்களில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார்: "தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல்" (ரோமர் 4:20). "தேவனுடைய வாக்குத்தத்தம்" என்பது ஆபிரகாமும் அவரது சந்ததியார்களும் "உலகத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்" (வசனம் 13) என்பதாகும், இது ஆபிரகாம் ஒரு மகனையும் பல சந்ததிகளையும் பெறுவார் என்பது உட்பட்டிருந்த வாக்குத்தத்தங்களின் "பொதி" ஆகும். அந்த வாக்குத்தத்தம் நிறைவேறுதல் என்பது சாத்தியமற்றதாகக் காணப்பட்டாலும், அந்த முற்பிதா "அவிசுவாச மாய்ச் சந்தேகப்படவில்லை." ஆங்கில வேதாகமத்தில் இவ்விடத்தில், "did not waver in unbelief" என்றுள்ளது, இதில் உள்ள "waver" என்ற வார்த்தை, "தயங்குதல்" அல்லது "சந்தேகப்படுதல்" என்று அர்த்தப்படுகிற *diakrino* என்ற கூட்டு வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[13]

ஆபிரகாம் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படுவதற்குப் பதிலாக, "விசுவாசத்தில் வல்லவரானார்" (வசனம் 21ஆ). "வல்லவரானார்" என்பது *endunamoo* (*en* ["யில்"] கூட்டல் *dunamis* ["வல்லமை"]) என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[14] இவ்வசனத்தில் *endunamoo* என்பது செயல்பாட்டு வினையில் உள்ளது,[15] எனவே இது "வல்லவராக்கப்பட்டார்" அல்லது "பலப்படுத்தப்பட்டார்" என்று மொழிபெயர்க்கப்பட முடியும். "விசுவாசத்தில்" என்ற சொற்றொடரானது *te* ("the") *pistei* ("faith") என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது முன்னிடைச்சொல் இல்லாத நான்காம் வேற்றுமை உறுபாக[16] உள்ளது. NASB வேதாகமமும் தரம் வாய்ந்த பெரும்பான்மையான மொழிபெயர்ப்புக்களும், "இல்" ("in") என்ற முன்னிடைச்சொல்லை தருகின்றன, ஆனால் சில மொழிபெயர்ப்புகள், "மூலம்" அல்லது "ஆல்" என்ற வார்த்தைகளைத் தருகின்றன. " 'அவர் விசுவாசத்தில் வல் லவராக்கப் பட்டார்' (அவரது விசுவாசம் வல்லமையோடு வளர்ந்தது) அல்லது 'அவர் விசுவாசத்தின்மூலம் வல்லவராக்கப்பட்டார்' என்பது கிரேக்க மொழியில் புரிந்துகொள்ளப்படலாம்."[17] எவ்வகையிலும் ஆபிரகாம், கர்த்தருக்குள்ளும் அவரது வாக்குத்தத்தங்களுக்குள்ளதுமான தமது உறுதியான நம்பிக்கைகளில் பலமாக வளர்ந்தார். உடல் பயிற்சியானது உடலைப் பலப்படுத்துவது போலவே, ஒருவர் தமது விசுவாசத்தை "பயிற்சிசெய்தல்" (அதைச் சார்ந்திருந்து அதன்படி செயல்படுதல்) என்பது அந்த விசுவாசத்தைப் பெலப்படுத்தும்.

ஆபிரகாம் "தேவனை மகிமைப்படுத்தி [*doxa*] விசுவாசத்தில் வல்ல

வனானான்" (வசனங்கள் 21ஆ, இ). "தேவனை மகிமைப்படுத்துதல்" என்பது கர்த்தருக்கு உரிய மகிமையை அவருக்கு உரித்தாக்குதல் என்பதாக உள்ளது. 1ம் அதிகாரத்தில், பவுல் "அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும் ..." என்ற நடக்கையுள்ள மக்களைப் பற்றி விவரித்திருந்தார் (1:21அ). ஆபிரகாம் அப்படிப்பட்ட நன்றியற்றவர்களைப்போல் இருக்கவில்லை; அவர் கர்த்தரைக் கனப்படுத்தினார். இவ்விஷயத்தில் நீங்களும் நானும் ஆபிரகாமின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுதல் அவசியமாகும். "அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக" (2 பேதுரு 3:18ஆ).

அது நம்மை 21ம் வசனத்திற்குக் கொண்டுவருகிறது, இது ஆபிரகாமின் விசுவாசத்தைப் பற்றிய தொகுப்புரையாக, அவரது முழுமையான நம்பிக்கையைப் பற்றிய சுருக்கக்கூற்றாக உள்ளது: "தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனான்." "முழுநிச்சயமாய் நம்பி" என்பது plerophoreo (pleos ["முழுமையான"] கூட்டல் phoreo ["சுமக்க"]) என்ற வார்த்தையிலிருந்து வருகிறது.[18] இவ்வசனத்தில் plerophoreo என்பது "*நிச்சயத்தை அடைதல்*" என்பதைக் குறிக்கிறது.[19]

தேவன் தாம் வாக்குத்தத்தம் செய்தவற்றை நிறைவேற்ற "வல்லவராக இருந்தார்" என்று ஆபிரகாம் விசுவாசித்தார். அவ்வப்போது, நான் வாக்குறுதியொன்றைக் கொடுத்து அதை நிறைவேற்ற இயலாமல் போனது உண்டு. நான் வாக்குறுதி அளித்தபோது, அதைக் காத்துக்கொள்வதற்கான மனவிருப்பத்தைக் கொண்டிருந்தேன் மற்றும் அதைச் செய்ய என்னால் இயன்ற அளவு மிகச்சிறப்பாக முயற்சிசெய்தேன். இருப்பினும் முடிவில், என்னால் அதைச் செய்ய இயலாது போனது. நமது தேவன் இவ்வாறு இருப்பது இல்லை. அவர் ஒரு வாக்குத்தத்தத்தை ஏற்படுத்தும்போது, அவர் அதை *நிறைவேற்ற வல்லவராக* இருக்கிறார். நமது தேவன் "வல்லவராயிருக்கிறார்" என்பது பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் ஒரு ஆய்வுக்கருத்தாக உள்ளது (தானியேல் 3:17; ரோமர் 11:23; 14:4; 2 கொரிந்தியர் 9:8; எபிரெயர் 7:25 ஆகியவற்றைக் காணவும்). "வல்லவர்" என்பது dunatos என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது "வல்லமை" என்பதற்கான dunamis என்ற அதே வார்த்தையின் குடும்பத்தைச் சேர்ந்ததாகும். நமது தேவன் சர்வவல்லவராக, சகலவல்லமையும் நிறைந்தவராக இருக்கிறார்! TEV வேதாகமம், ஆபிரகாம் "தேவன் தாம் வாக்குத்தத்தம் செய்திருந்ததைச் செய்ய வல்லவராயிருக்கிறார் என்பதில் முழுநிச்சயமாய் இருந்தார்" என்று கூறுகிறது.

தேவன் வாக்குத்தத்தம் செய்ததை அவரால் செய்ய*முடியும்* என்று விசுவாசித்ததோடு ஆபிரகாம் நிறுத்திவிடவில்லை; தேவன் அதைச் *செய்வார்* என்றும் அவர் [ஆபிரகாம்] விசுவாசித்தார். தேவன் *உண்மையுள்ளவர்* என்று அவர் விசுவாசித்தார் (உபாகமம் 7:9; 1 கொரிந்தியர் 1:9 ஆகியவற்றைக் காணவும்). பொய்யுரைத்தல் என்பது தேவனால் செய்ய இயலாத ஒரு விஷயமாகும் (தீத்து 1:2; எபிரெயர் 6:18ஐக் காண்க). மக்கள் எப்போதுமே தங்கள் வார்த்தையைக் காப்பாற்றுவதில்லை, ஆனால் தேவன் அதைச்செய்கிறார். அவர் வாக்குத்தத்தம் செய்தது எதுவோ அதை அவர் செய்வார்!

தேவன் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்று விசுவாசிப்பது ஆபிரகாமுக்கு எளிதாக இருந்ததா? டொனால் பார்ன்ஹவுஸ் என்பவர்,

*ஒவ்வொரு ஆண்டையும் ஒரு மகனைப் பெறாமலேயே கடத்துதல் என்பது ஆபிராமுக்கு (அப்போது அவர் இப்பெயரால் அறியப்பட்டார்) எவ்வளவு இருதய வேதனை தருவதாக இருந்திருக்க வேண்டும் என்பதைப் பின்வருமாறு சித்தரித்தார்:*

> *செல்வமிக்க வர்த்தகர்களின் ஒட்டகக் கூட்டங்கள் நாட்டிற்குள் வரும்போது, அவர்கள் ஆபிராமின் கிணற்றண்டையில் நிற்பதுண்டு. பயணிகளுக்கு உணவும் விற்கப்பட்டது. மாலைவேளையில் அந்த வர்த்தகர்கள் ஆபிராமுக்கு மரியாதை செலுத்துவதற்காக அவரது கூடாரத் திற்கு வருவதுண்டு. அவர்களின் கேள்விகள் பின்வரும் முறையான வடிவப்படி அமையும். நீர் யார்? உமது வயது என்ன? நீர் இவ்விடத்தில் எவ்வளவு காலம் இருக்கிறீர்? வர்த்தகர் தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டபின்பு, ஆபிராம் தம்மைப் பற்றி அறிமுகம் செய்யும்படியான கட்டாயத்தில் இருப்பார்: ஆபிராம், பலருக்குத் தகப்பன். இது ஒரு நூறுமுறைகள், ஒரு ஆயிரம் முறைகள் நடந்திருக்கலாம், ஒவ்வொரு முறையும் அதற்கு முந்திய முறையைவிட அதிகம் மனவேதனையானதாக இருந்திருக்கும். "ஓ! பலருக்குத் தகப்பன்! பாராட்டுக்கள்! நீங்கள் எத்தனை மகன்களைப் பெற்றிருக்கிறீர்கள்?" ஆபிராம், "ஒன்றுமில்லை" என்று கூறியபோது மிகவும் சிறுமைப்பட்டவராக உணர்ந்திருப்பார். "பலருக்குத் தகப்பன்," ஆனால் ஒருவனுக்குக்கூடத் தகப்பனில்லை. அவர் முற்பிதாவாக இருந்தார்; அவரது வார்த்தை சட்டமாக இருந்தது; அவர் திரளான கால்நடைகளையும் பல வேலைக்காரர்களையும் கொண்டிருந்தார், ஆனால் - அவருக்குப் பிள்ளைகள் இல்லை, அவரது பெயர் "பலருக்குத் தகப்பன்" என்பதாக இருந்தது.[20]*

*இருந்தபோதிலும், ஆபிரகாம் "தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறை வேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழுநிச்சயமாய் நம்பி" அதில் நிலைத்திருந் தார் (ரோமர் 4:21).*

*ஒருவேளை நான் ஆபிரகாம் "தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை ... நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழுநிச்சயமாய் நம்பி" இருந்தார் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியதாயிருக்கும். ஆபிரகாமின் விசுவாச மானது அவர் கற்பனை செய்திருந்த அல்லது கனவுகண்டிருந்த சிலவற்றின் அடிப்படையிலானதாக இருக்கவில்லை: அது தேவன் கூறியிருந்தவற்றின் மீது உறுதியாக வேரூன்றி இருந்தது. 10ம் அதிகாரம், "விசுவாசம் கேள்வி யினாலேவரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்று கூறுகிறது (வசனம் 17; யோவான் 17:20ஆ வைக் காணவும்). நமது விசுவாசம் தேவன்மீது கவனம் குவிப்பதாக இருந்தால் மாத்திரம் போதாது; அது வேதாகமத்தின் அடிப்படையினாலதாகவும் இருக்க வேண்டும்.*

*இவ்வேளையில் நீங்கள், "நான் ஆபிரகாமைப்போன்று விசுவாசம் கொண்டிருக்க விரும்புகிறேன்! அது ஒருக்காலும் அலைவுபட்டிராத பின்வாங்கிப்போகாத விசுவாசமாக, ஒருக்காலும் சந்தேகப்பட்டிராத பலத்த விசுவாசமாக இருந்தது!" என்று நினைக்கலாம்.[21] ஆபிரகாமின் விசுவாசம் பூரணப்பட்டு இருந்தது என்ற மனப்பதிவை விட்டுச்செல்ல நான் விரும்ப வில்லை. ஆபிரகாமின் விசுவாசம் பூரணப்பட்டதாக இருந்தது. எனவே உங்கள் விசுவாசமும் பூரணப்பட்டதாக இருக்க வேண்டும் என்று நீங்கள் நினைத்தால்,*

நீங்கள் உங்களுக்குச் சாத்தியமற்ற தர அளவையை அமைக்கிறீர்கள். நீங்கள் இதைச் செய்தால், ஏமாற்றமும் பெரும்வருத்தமும் தவிர வேறு எதையும் எதிர் நோக்க இயலாது.

இல்லை, ஆபிரகாமின் விசுவாசம் பூரணப்பட்டதாக இருக்கவில்லை. அவர் மனிதராக இருந்தார், அது அவர் பூரணப்பட்டவரல்ல மற்றும் அவரது விசுவாசம் பூரணப்பட்டதல்ல என அர்த்தப்படுகிறது. ஆதியாகமம் 15ல், அவருக்குப் பிள்ளைகள் இல்லாதபடியால், அவர் தமது வேலைக்காரன் ஒருவன் தனக்கு வாரிசாக இருக்க வேண்டும் என்று தேவனிடத்தில் ஆலோசனை தெரிவித்தார் (வசனங்கள் 2, 3). ஆதியாகமம் 17ல் தேவன், சாராள் ஒரு மகனைப் பெறுவாள் என்று கூறியபின்பு (வசனங்கள் 15, 16), ஆபிரகாம் தனக்குள்ளே நகைத்துக்கொண்டு, "நூறுவயதானவனுக்குப் பிள்ளை பிறக்குமோ? தொண்ணூறு வயதான சாராள் பிள்ளை பெறுவாளோ?" என்று தன் இருதயத்திலே சொல்லிக்கொண்டார் (வசனம் 17). பின்பு அவர் இஸ்மவேல் தனது வாரிசாக இருப்பதைத் தேவன் அனுமதிக்க வேண்டும் என்று அவரை இணங்கச் செய்ய முயற்சித்தார் (வசனம் 18). மாதங்கள் ஆண்டுகளாகவும், ஆண்டுகள் பத்தாண்டுகளாகவும் மாறுகையில், ஆபிரகாம் "திரளான கூட்டத் திற்கு தகப்பனாவார்" என்ற வாக்குத்தத்தத்துடன் அவர் போராடினார் என்பதே ஒளிவுமறைவற்ற உண்மையாகும்.

பின்பு, ஏன் பவுல், ஆபிரகாம் "தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழுநிச்சயமாய் நம்பி," "அவிசுவாச மாய்ச் சந்தேகப்படாமல்" இருந்தார் என்று கூறினார் (வசனங்கள் 20, 21)? ஆபிரகாம் அந்த வாக்குத்தத்தம் *எவ்வாறு* நிறைவேறும் என்பது குறித்துப்போராடிய அளவுக்கு அந்த வாக்குத்தத்தத்தை விசுவாசிப்பதில் போராடவில்லை என்பது அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கும் ஒருவகை யாக உள்ளது. ஒரு இணைகருத்தைக்கூற முயற்சிக்க என்னை அனுமதியுங்கள். 8ம் அதிகாரத்தில் பவுல் "தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று" கூறினார் (வசனம் 28ஆ). வாழ்வு நம்மை மூழ்கடித்துவிடுவதாக அச்சுறுத்தும் போது, தேவன் அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவது *எவ்வாறு* சாத்தியமாகும்? என்று நாம் திகைப்படையலாம். இருந்தபோதிலும், நாம் அந்த வாக்குத்தத்தத்தை விடாதுபற்றிக்கொண்டு கர்த்தருக்கு உண்மைநிறைந்தவர்களாக நிலைத்திருந்தால், நாம் "சந்தேகப்படாது" இருக்கிறோம் என்று கூறப்பட முடியும்.

ஆபிரகாம் தமது விசுவாசம் தமது குறைவுகள், அனுபவித்த கணநேர சந்தேகங்கள் ஆகியவற்றுடன்கூடப் போராடியிருக்கலாம் - ஆனால் அவர் ஒருக்காலும் தமது கண்களைத் தேவனைவிட்டு எடுக்காது இருந்தார். ஆபிரகாமின் விசுவாசக்கவனக்குவிப்பு போன்று அவரது விசுவாசத்தின் தரமும் அளவும் அவ்வளவு முக்கியமல்ல என்பதை நினைவில் வையுங்கள். ஆபிரகாமின் விசுவாசத்தினுடைய அடிச்சுவடுகளை நீங்கள் பின்பற்றுகையில், நீங்களும்கூட கேள்விகளையும் அவ்வப்போது சந்தேகங்களையும்கூட பெறுவீர்கள். அது நடக்கிறபோது, தொடர்ந்து ஜெபியுங்கள், தொடர்ந்து தேவனுடைய வசனத்தை வாசியுங்கள், தொடர்ந்து தேவனுடைய சித்தத்தைச் செய்யுங்கள். ஆபிர காமைப்போலவே தேவனிடம் நெருங்கி நிலைத்திருங்கள், அப்போது நீங்களும் "விசுவாசத்தில் வல்லவராக" வளரமுடியும் (ரோமர் 4:21).

பவுல், ஆபிரகாமின் வாழ்வுபற்றிய தமது ஆராய்வை, ஆதியாகமம் 15:6ஐ மறுபடியும் மேற்கோள் காண்பித்து முடித்தார்: "ஆகையால் அது [ஆபிரகாமின் விசுவாசம்] அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" [*logizomai*] (ரோமர் 4:22). அவரது விசுவாசம் பூரணப்பட்டிருக்கவில்லை, ஆனால் அது அப்பொழுதும் விசுவாசமாகவே இருந்தது. ஏனென்றால் அந்த விசுவாசத்தைத் தேவன் ஆபிரகாமுக்கு நீதியாக எண்ணினார்.

## ஆபிரகாமைப் பின்பற்றுபவர்கள் (4:23-25)

பின்பு பவுல் தமது வாசகர்களுக்கு - மற்றும் நமக்கு - நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்தினார். "அது அவனுக்கு நீதியாக எண்ணப் பட்டதென்பது [*logizomai*], அவனுக்காக [ஆபிரகாமுக்காக] மாத்திரமல்ல, நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது" (வசனம் 23). ஆதியாகமம் 15:6, "ஆபிரகாம் மனிதர்களின் நினைவில் வாழவேண்டும் என்பதற்காக ஆபிரகாமுக்கு வெறும் நினைவுச்சின்னமாக மாத்திரம்" எழுதப்படவில்லை.[22] தேவன், மோசேயின் நாட்களில் இருந்த மக்கள் சிலவற்றைக் *கற்றுக்கொள்ள* வேண்டும் என்பதற்காகவே மோசேயைக் கொண்டு இவ்வார்த்தைகளை எழுதுவித்தார் - மற்றும் அவற்றிலிருந்து மக்கள் இன்றும் சிலவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்று பவுல் கூறினார். வரலாற்றை ஒப்புவிப்பதில் பவுல் சிறிதளவே ஆர்வம் கொண்டிருந்தார், ஆனால் அவர் இருதயங்களையும் வாழ்வுகளையும் மாற்றுவதற்கு மாபெரும் ஆர்வம் கொண்டிருந்தார்.

ஆதியாகமம் 15:6 "விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப் [*logizomai*]படுவதற்காக" எழுதப்பட்டிருக்கிறது (4:23). ஆபிரகாமின் விசுவாசத்திற்குச் செய்யப்பட்டதுபோலவே நமது விசுவாசமும் நமக்கு நீதி யாக எண்ணப்படும், ஏனென்றால் நாம் இருவருமே கிருபை/விசுவாசம் என்ற முறைமையின் கீழ் இருக்கிறோம். 22 முதல் 24 வரையுள்ள வசனப்பகுதியில் *logizomai* என்ற வார்த்தையின் மும்முனை பயன்பாடு நமக்கு, "தேவனுடைய திகைப்புக்குரிய கணக்கு வைக்கும் ஏற்பாட்டை" நினைவூட்டுகிறது. CJB வேதாகமத்தில், "But the words ... were written also for us, who will certainly have our account credited too" ["ஆனால் இவ்வார்த்தைகள் ... நிச்சயமாகவே நமது கணக்கில் வரவுவைக்கப்படும்படியாக நமக்காகவும் எழுதப்பட்டுள்ளன"] என்றுள்ளது (வசனம் 23). 25ம் வசனத்தில் AB வேதாகமம், கிறிஸ்து "நமது கணக்கை நேர்செய்து" மரித்தார் என்று குறிப்பிடுகிறது. இது தேவன் தமது "புத்தகப் பராமரிப்பை" எவ்வாறு செய்கிறார் என்பதற்கு ரோமருக்கு எழுதிய நிருபத்தில் வரும் கடைசிக்குறிப்புகளில் ஒன்றாக உள்ளது, ஆனால் இது இந்த நிருபத்தின் எஞ்சிய பகுதிக்கு ஒரு குறிப்புக்கருத்தை அளிக்கிறது.

**தேவனுக்குள் விசுவாசம் ...**

ஆபிரகாம் எதை விசுவாசித்தார் என்பது பற்றிப் பவுல் பேசியிருந்தார். இப்போது அவர் இந்தக் கலந்துரையாடலை, நீங்களும் நானும் விசுவாசிக்க வேண்டியது என்ன என்பதைப் பற்றிய ஒரு தொகுப்புரையோடு முடித்தார். நாம் விசுவாசிக்கும் விஷயத்திற்கும் ஆபிரகாம் விசுவாசித்த விஷயத்திற்கும் மறை முகமான ஒப்பீடு ஒன்று இங்குள்ளது.

ஆதியாகமம் 15:6 *நமக்காக* எழுதப்பட்டது என்று கூறியுள்ள நிலையில்

பவுல் தாம் யாரைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார் என்பதைக் குறிப்பிட்டார்: "நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும்" (வசனம் 24அ). ஆபிரகாம், "மரித்தோருக்கு ஜீவன்" தரக்கூடிய தேவனில் விசுவாசம் கொண்டிருந்தார் (வசனம் 17) மற்றும் நாமும்கூட அதே வகையான விசுவாசம் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகிறது. இந்த அதிகாரத்தின் முற்பகுதியில் கிறிஸ்துவைக் குறித்து மறைமுகமான குறிப்புகள் ஏற்படுத்தப்பட்டன, ஆனால் இவ்விடத்தில்தான் "இயேசு" என்ற பெயர் முதன்முறையாக வருகிறது.

இயேசுவின் உயிர்த்தெழுதல்தான் நமது விசுவாசத்தின் மையமாக உள்ளது. 1ம் அதிகாரத்தில் பவுல் "இயேசு தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்" என்று கூறினார் (வசனம் 5). 10ம் அதிகாரத்தில் அவர் இரட்சிக்கப்படுவதற்கு நீங்கள், "தேவன் அவரை [இயேசுவை] மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உங்கள் இருதயத்திலே விசுவாசிக்க வேண்டும்" என்று கூறினார் (வசனம் 9). உயிர்த்தெழுதல் இன்றி நாம் "ஜீவனுள்ள நம்பிக்கை" (1 பேதுரு 1:4) பெற்றிருக்க இயலாது மற்றும் நமது விசுவாசம் "வீணாயிருக்கும்" (1 கொரிந்தியர் 15:17).

பின்பு பவுல் இயேசுவைப்பற்றி, "அவர் நம்முடைய பாவங்களுக்காக[23] ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்" என்று கூறினார் (வசனம் 25).[24] இயேசு "ஒப்புக்கொடுக்கப்பட்டார்" என்று பவுல் கூறியபோது, அவர் சிலுவையில் அறையப்படும்படிக்குத் தமது விரோதிகளிடத்தில் "ஒப்புக்கொடுக்கப்பட்டார்" என்பது புரிந்துகொள்ளப்பட்டதாக உள்ளது. இவ்விதமாக NIV வேதாகமத்தில், "He was delivered over to death" ["அவர் மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார்]" என்றுள்ளது.

"ஒப்புக்கொடுக்கப்பட்டு" என்பது *paradidomi* (*para* ["பக்கமாக"] கூட்டல் *didomi* ["கொடுக்க"]) என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வார்த்தையின் வடிவம் ஒன்று, இயேசுவினுடைய விரோதிகள் அவரை ஒப்புக்கொடுத்ததை விவரிக்கப் பயன்படுத்தப்பட்டது, ஆனால் 25ம் வசனம் இயேசுவின் விரோதிகளைக் குறிப்பிடுவதில்லை. "அவர் நம்முடைய *பாவங்களுக்காக* ஒப்புக்கொடுக்கப்பட்டும் ..." என்பதைக் கவனியுங்கள். கிறிஸ்துவின் எதிரிகள் "நமது பாவங்களின்மீது" அக்கறை எதுவும் கொண்டிருக்கவில்லை; அவர்கள் வெறுத்த ஒருவரை ஒழித்துக்கட்டுவதே அவர்களின் அக்கறையாக இருந்தது. 25ம் வசனம், நமது பாவங்களுக்காக "கிருபாதாரபலியாக" (3:25) இயேசுவைத் *தேவன்* ஒப்புக்கொடுத்தலைப் பற்றி பேசுகிறது. 8ம் அதிகாரத்தில் தேவனைப்பற்றிப் பவுல் "தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர்" என்று கூறினார் (வசனம் 32அ).

25ம் வசனத்தின் பல பண்பினங்கள் விளக்கவுரையாளர்களுக்குப் புதிராயிருக்கின்றன. இவற்றில் ஒன்று, *dia* என்ற முன்னிடைச்சொல் திரும்பத்திரும்ப வருவதாகும் (NASBயில் இது "because of" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தமிழ் வேதாகமத்தில் இது "பாவங்களுக்காக மற்றும் நீதிமான்களாக்கப்படுவதற்காக" என்பதில் உள்ள "காக" என்ற விகுதிச்சொல்லாகும்). "அவர் நம்முடைய பாவங்களுக்*காக*

ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படு*வதற்காக* எழுப்பப் பட்டும் இருக்கிறார்.'' இரு கூற்றுக்களும் இணையாக இருக்க வேண்டும் என்று பவுல் நோக்கங்கொண்டார் என்பது தெளிவு. "பாவங்கள்'' மற்றும் "நீதிமானாக்கப்படுதல்'' ஆகியவை ஒரே வகைப்பட்டவையல்ல என்பதே இங்கு பிரச்சனையாக உள்ளது; அவைகள் எதிரானவைகளாக உள்ளன. பவுல் தமது வாசகர்கள் இந்தக்கூற்றினுடைய ஒவ்வொரு பாகத்திலும் உள்ள சிந்தனையை முழுமைப்படுத்தும்படி எதிர்பார்த்தார் என்பது தெளிவு: கிறிஸ்து மரிப்பதற்கென்று ஒப்புக்கொடுக்கப்பட்டார். "ஏனென்றால்" நமது பாவங்களின் குற்றத்தை நீக்குவதற்கு அப்படிப்பட்ட விஷயம் தேவையாயிருந்தது, மற்றும் அவர் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார். "ஏனெனில்'' நாம் நீதிமான்களாக்கப்படுவதற்கு அப்படிப்பட்ட விஷயம் தேவையாயிருந்தது.

25ம் வசனத்தின் கடைசிப்பகுதியில் உள்ள சொற்றொடராக்கம் மற்ற சில விளக்கவுரைகளை அழைக்கிறது: அவர் "நாம் நீதிமான்களாக்கப்படு வதற்காக மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார்.'' விதிப்படி பவுல், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காகக் கிறிஸ்து *மரித்தார்* என்று உரைத்தார். 5:9ல் அவர் "நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க'' என்று கூறினார் (3:24, 25ஐக் காணவும்). இருப்பினும், இங்கு அவர் நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காகக் கிறிஸ்து *"எழுப்பப்பட்டார்"* என்று கூறினார். உயிர்த்தெழுதலின் காரணமாக, இயேசுவின் மரணம் தேவனுடைய கோபத்தைத் திருப்திப்படுத்திற்று என்று நாம் உறுதியாயிருக்க முடியும் என்பது இயேசுவின் உயிர்த்தெழுதல் நாம் "நீதிமான்களாக்கப்படுவதற்கானதாக" இருந்ததற்கான ஒரு வழியாக உள்ளது. இந்தச்சொற்றொடரில் இன்னும் சில தனிச்சிறப்புகள் இருக்கலாம்.

சில எழுத்தாளர்கள்[25] எபிரெயருக்கு எழுதிய நிருபத்தைக் கவனிக்கும் படி அழைக்கின்றனர், அந்த நிருபம் இயேசுவை நமது பிரதான ஆசாரியர் என்று குறிப்பிடுகிறது (2:17; 3:1; 4:14, 15). எபிரெயர் 9ம் அதிகாரம், பழைய ஏற்பாட்டுப் பிரதான ஆசாரியருக்கும் இயேசுவுக்கும் இடையில் ஒரு இணைவைத் தரவழைக்கிறது. பழைய ஏற்பாட்டில், பிரதான ஆசாரியர் ஆண்டுக்கு ஒருமுறை மிருகங்களின் இரத்தத்தை எடுத்துக்கொண்டு மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பார். இந்த இரத்தத்தை அவர், தேவனுடைய சிங்காசனத்தைப் பிரதி நிதித்துவப்படுத்திய கிருபாசனத்தின் (பேழையின் மூடியின்)மீது தெளிப்பார். இதை அவர், மக்களின் பாவநிவாரணத்திற்காகச் செய்தார். நமது பிரதான ஆசாரியர் என்ற வகையில் இயேசு, பரலோகமாகிய மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்தார் (எபிரெயர் 9:24ஐக் காணவும்). மிருகங்களின் இரத்தத்தைக் கொண்டுவருவதற்குப் பதில், அவர் தம் சொந்த இரத்தத்தையே தேவனுடைய அரியணையின் முன்வைத்தார். நமது பாவங்களைப் பரிகரிப்பதற்காக அவர் இதைச் செய்தார் - இதை ஒவ்வொரு ஆண்டும் அவர் செய்யவில்லை, ஆனால் எல்லாக்காலத் திற்கும் ஒரே முறையாக இதைச் செய்தார். பிரதான ஆசாரியத்துவப்பணியை நிறைவேற்றுவதற்கு இயேசு *எழுப்பப்பட வேண்டியதாகவும்* பின்பு அவரது பிதாவினிடத்திற்கு எழுந்தருள வேண்டியதாகவும் இருந்தது. இவ்வாறு, சார்லஸ் ஹோட்ஜ் என்பவர், "நம் நிமித்தம் அவரது நிறைவின் ஏற்றுக்கொள்ளுதலுக்குச் சாட்சியாகவும், அவரது பலியின் தகுதிகளை நடைமுறையில் செயல்படுத்துதலைப் பாதுகாக்கும் அவசியமான ஒரு அடிவைப்பாகவும் இருப்பதுபோன்றே,

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் என்பது நாம் நீதிமானாக்கப்படுதலில்கூட முற்றிலும் அத்தியாவசியமானதாக உள்ளது" என்று எழுதினார்.[26]

கிறிஸ்து "நமது பாவங்களுக்காக" மரித்து நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக "எழுப்பப்பட்டார்" என்று பவுல் கூறியபோது, அவர் இயேசுவின் மரணம் நாம் நீதிமான்களாக்கப்படுவதற்கு ஒன்றும் செய்வதற்கில்லை என்றோ அல்லது அவரது உயிர்த்தெழுதல் நமது பாவங்களில் இருந்து நம்மை மன்னிப்பதற்கு ஒன்றும் செய்வதற்கில்லை என்றோ மறைமுகமாய்க் குறிப்பிட நோக்கங்கொண்டிருக்கவில்லை என்பது நிச்சயம். மாறாக, அவர் *இவ்விரண்டுமே* நமது இரட்சிப்பில் இன்றியமையாத பாகத்தை செயல்படுத்துகின்றன என்றே அவர் கூறினார். R. C. பெல் என்பவர், பவுல் இவ்விதமாக "இரட்சிப்பின் கதவு திரும்புவதற்கான இரண்டு கதவுக்கீல்களாக" சிலுவையில் அறையப்படுதல் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றைப் பவுல் ஒன்றிணைத்தார் என்று எழுதினார்.[27]

### ... ஆனால் இயேசுவுக்குள் இல்லை?

ஆபிரகாமின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுதல் பற்றிய நமது கலந்துரையாடலை முடிக்குமுன்னர், இன்னும் ஒரு விஷயத்தைக் கையாள வேண்டியது நமக்கு அவசியமாயிருக்கிறது. தேவனால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குக் கிறிஸ்துவில் விசுவாசம் கொள்வது அவசியம் இல்லை என்று "நிரூபிக்க" ரோமர் 4ம் அதிகாரத்தைச் சிலர் பயன்படுத்துகின்றனர்.[28] அவர்கள் "ஆபிரகாம் *தேவனை* விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்" (வசனம் 3; வசனம் 17ஐக் காணவும்) என்பதையும், நாம் ஆபிரகாமுடைய விசுவாசத்தைக் கொண்டிருக்க வேண்டும் (வசனம் 16) என்பதையும் சுட்டிக் காண்பிக்கின்றனர். மற்றும் அவர்கள் நமது விசுவாசத்தைப் பற்றி இந்த அதிகாரம் பேசுகையில், *தேவனில்* விசுவாசம் என்பதுதான் வலியுறுத்தமாக உள்ளது என்று குறிப்பிடுகின்றனர் (வசனங்கள் 5, 24). ஆகையால் அவர்கள் - யூதர்கள் உட்பட - தேவன்மீது விசுவாசம் கொள்ளும் யாவரும், இயேசுவில் விசுவாசம் கொண்டாலும் கொண்டிராதிருந்தாலும் இரட்சிக்கப்படுவார்கள் என்று முடிவு செய்கின்றனர்.

ரோமர் 3:26ல், தேவன் "தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய்" என்று பவுல் தெளிவாகக் கூறினார். இதைப்போன்ற வசனப்பகுதிகள் எண்ணற்றவைகள் உள்ளன, ஆனால் நான் ரோமர் 4க்கான "ஆதார வசனங்களை" கொடுப்பதுடன் எனது குறிப்புரைகளை வரையறைப்படுத்திக்கொள்வேன். முதலாவது, பவுல் இந்த அதிகாரத்தில் யூதர்களிடத்தில், அவர்களுக்கு மிகவும் பிரியமான ஆபிரகாமைப் பற்றி உரைக்கையில், அவர்களுக்கு இசைவிணக்கம் உள்ள "விசுவாச" மொழி நடையைப் பயன்படுத்தினார் என்பதைச் சுட்டிக் காண்பிக்க வேண்டும். டக்ளஸ் J. மூ என்பவர் பவுல் "தேவனை மிக அரிதாகவே நமது விசுவாசத்தின் பொருளாக ஏற்படுத்துகிறார். இவ்விடத்தில் அவர் கிறிஸ்தவ விசுவாசத்தை இயன்றவரையில் ஆபிரகாமின் விசுவாசத்தைப் போலாக்குவதற்கு அவர் இவ்வாறு செய்கிறார்" என்று விளக்கம் அளித்தார்.[29]

இரண்டாவது, தேவனுக்குள் நமது விசுவாசம் குறிப்பிடப்படும்போதுகூட, அவரது குமாரனுக்குள் உள்ள விசுவாசம் விலக்கப்படவில்லை. 5ம் வசனம் நாம் "பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்க" வேண்டும் என்று கூறுகிறது,

*ஆனால் நீதிமானாக்கப்படுதல் என்பது இயேசுவின் மரணத்தின் மூலமாக மாத்திரமே சாத்தியமாக்கப்படுகிறது (5:9). 24ம் மற்றும் 25ம் வசனங்களில், "நம்முடைய பாவங்களுக்காக, நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கி[ற] நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பிய ..." தேவன்மீது நமது விசுவாசம் இருக்க வேண்டும் என்று நாம் வாசிக்கிறோம்.*

*மூன்றாவது, ஆபிரகாம் இயேசுவைப் பற்றி எல்லாவற்றையும் அறிந்திராவிட்டாலும், தமது "சந்ததி" பற்றித் தேவன் அளித்திருந்த வாக்குத்தத்தத்தை அவர் விசுவாசித்தார் (ஆதியாகமம் 22:18; கலாத்தியர் 3:16). செயல்விளைவில் தேவன், ஆபிரகாமுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் (கலாத்தியர் 3:8ஐக் காணவும்), மற்றும் ஆபிரகாம் தமக்குத் தேவன் வெளிப்படுத்தினதை நம்பினார். சிலுவைக்கு இந்தப்பக்கம் வாழ்ந்து ஆனால் இயேசுவைப் பற்றிய தேவனுடைய வெளிப்படுத்துதலை நம்புவதை மறுக்கிற எவரொருவரும் விசுவாசத்தில் முதிர்ந்த மனிதரான ஆபிரகாமைப்பற்றி கூறப்படும் அதே மூச்சில் குறிப்பிடத் தகுதியற்றவர்கள் என்பதே எனது முடிவாக உள்ளது!*

> *நமது நாட்களில், தேவன் தம்மை நிச்சயமாகவே இயேசுவில் வெளிப்படுத்தினார். ஆபிரகாம் இன்றைய நாட்களில் வாழ்ந்திருந்தால், அவர் கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவன்மீதான விசுவாசம் இன்றி இரட்சிக்கப்பட முடியாது ... கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்டுள்ள, குறிப்பாக இந்தத் தேவன் மீது விசுவாசம் கொண்டுள்ளவர்கள் மாத்திரமே இரட்சிப்பின் நம்பிக்கையைப் பெற்றுள்ளனர் என்று ... நாம் முடிவு செய்கிறோம்.*[30]

## முடிவுரை

*ஆபிரகாமின் விசுவாசம் திகைப்புக்குரியதாக உள்ளது. அவர் "வாசிக்க ஒரு வேதாகமம் கொண்டிருக்கவில்லை; அவர் தேவனுடைய எளிய வாக்குத்தத்தம் மாத்திரமே பெற்றவராயிருந்தார். அவர் ஒரு விசுவாசி என்ற வகையில் ஏறக்குறைய ஒற்றையாளாக இருந்தார், அவரைச் சுற்றிலும் புறதெய்வ வணக்கம் செய்யும் அவிசுவாசிகள் நிறைந்திருந்தனர். அவர் விசுவாசத்தைப் பற்றிய நீண்டபதிவேடு ஒன்றைப் பின்னோக்கிக் காண இயலாதிருந்தார்; உண்மையில் அவரே அந்த வரலாற்றை எழுத உதவி செய்தவராயிருந்தார். இருப்பினும் ஆபிரகாம் தேவனை விசுவாசித்தார்."*[31] R. C. *பெல் என்பவர் ஆபிரகாமை, விசுவாசத்தின் "மாதிரி" மனிதர், "அவரது நாட்களில் இருந்தே எல்லா விசுவாசிகளுக்கும் முன்மாதிரி" என்று அழைத்தார்.*[32]

*ரோமர் 4ல் வெளிப்படுத்தப்பட்டபடியாக ஆபிரகாமின் விசுவாசத்தை நாம் எவ்வாறு தொகுத்து உரைக்க முடியும்? தேவன் சிலவற்றைக் கூறியபோது, அவற்றை ஆபிரகாம் விசுவாசித்தார். அது மனித காரண அறிவிற்கு முரண்பட்டபோதிலும், அதை அவர் விசுவாசித்தார். அது அவரது உணர்வுகளின் ஆதாரத்திற்கு நேர்மாறானதாக இருந்தபோதிலும் அதை அவர் விசுவாசித்தார். ஒருவேளை அவர் தேவன் தமது வார்த்தையை எவ்வாறு செயல்படுத்துவார் என்ற கேள்வியுடன் போராடியிருக்கலாம், ஆனால் அவர் தமது விசுவாசத்தைக் கைவிட மறுத்துவிட்டார். அவர் தமது விசுவாசத்தில் உறுதியாய் நிலைநின்றார் மற்றும் அந்த விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டே தமது வாழ்வை*

அமைத்துக் கொண்டார். அந்த விசுவாசத்தைத் தேவன் பார்த்தார், "அது அவருக்கு [ஆபிரகாமுக்கு] நீதியாக எண்ணப்பட்டது" (4:3).

இன்றைய நாட்களில் சிலர் இயேசுவில் விசுவாசம் கொண்டுள்ளதாக உரிமை கோருகின்றனர், ஆனால் அவர்களின் விசுவாசம், ஆபிரகாம் கொண்டிருந்த விசுவாசத்தின் வகையைவிட மிகவும் குறைவானதாக உள்ளது. "மாபெரும் பிளன்டின்" என்ற ஜீன் ஃபிரான்கோயிஸ் கிரேவெலட் என்பவரைப் பற்றிய கதை ஒன்று என் நினைவுக்கு வருகிறது.

> பிளன்டின் என்பவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவரும், இறுகக் கட்டிய கயிற்றின்மீது நடக்கும் ஒரு பிரபலமான மனிதருமாக இருந்தார், இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தார். ஒருமுறை, நயாகரா நீர்வீழ்ச்சிக்கு மேல்புறத்தில் அவர் ஒரு கயிற்றைக் கட்டி, அதில் அந்த அருவியைக் குறுக்காகக் கடந்து நடந்தார். பிளன்டின், அந்த அருவியின் அமெரிக்கப்பகுதிக்கு வந்துசேர்ந்தபோது, ஆயிரக்கணக்கான மக்கள் அவரை உற்சாகப்படுத்திப் பாராட்டினர்.
>
> பிளன்டின் அந்தக்கூட்டத்தினரை அமைதிப்படுத்திவிட்டு, "நான் அந்த இறுகக் கட்டிய கயிற்றின்மீது திரும்பவும் நடந்து அருவியைக் குறுக்காகக் கடக்கப்போகிறேன், ஆனால் இம்முறை நான் யாரையாவது என் தோள்களில் தூக்கிச் செல்லலாம் என்றிருக்கிறேன். நீங்கள் என்னை நம்புகிறீர்களா?" என்று கேட்டார்.
>
> கூட்டமானது, "நாங்கள் நம்புகிறோம்! நாங்கள் நம்புகிறோம்!" என்று உச்சாடனம் செய்தது, ஆனால் பிளன்டின், "அந்த நபராக இருப்பது யார்?" என்று கேட்டபோது, கூட்டம் அமைதியாயிற்று. கடைசியில் ஒரு மனிதர் அடியெடுத்து முன்வந்து, பிளன்டினுடைய தோள்களின்மீது ஏறிக்கொண்டு, அவரை அருவியின் கனடா நாட்டுப் பகுதிக்குக் கொண்டுசெல்ல அனுமதித்தார்.
>
> ஆயிரக்கணக்கான மக்கள் "நாங்கள் நம்புகிறோம்" என்று கூறினர், ஆனால் ஒரே ஒருவர்தான், தாம் நம்பிய விஷயத்திற்காகத் தமது உயிரைக் கொடுத்தார்.[33]

ஆபிரகாமின் விசுவாசம் வெறும் வார்த்தைகளில் வெளிப்படுத்தப் படவில்லை. அவர் தாம் விசுவாசித்த விஷயத்திற்காகத் தமது வாழ்வையே அர்ப்பணித்திருந்தார். அவர் தேவன் கூறியவற்றைச் செய்யத் தம்மையே ஒப்புக்கொடுத்திருந்தார். நீங்கள் ஆபிரகாமினுடைய விசுவாசத்தின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறீர்கள் என்றால், கர்த்தரைப் பிரியப்படுத்த உங்களால் செய்ய முடிந்த எல்லாவற்றிற்கும் உங்களையே நீங்கள் ஒப்புக்கொடுப்பீர்கள். நீங்கள் கிறிஸ்துவையும் அவரது பலியையும் விசுவாசிப்பீர்கள் (1:16). நீங்கள் மனந்திரும்புதல் மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவற்றில் உங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்துவீர்கள் (2:4; 10:9). நீங்கள் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டிருக்க விரும்புவீர்கள் (6:3-6ஐக் காணவும்). தேவனுடைய பிள்ளை என்ற வகையில் நீங்கள் "புதிய ஜீவனுள்ளவர்களாய்" நடக்கக் கடுமையாக முயற்சி செய்வீர்கள் (6:4).

உங்கள் விசுவாசம் எப்போதுமே, ஆபிரகாமுடைய விசுவாசத்தைப் போன்று குறைவுள்ளதாக இருக்கும், மற்றும் உங்கள் கீழ்ப்படிதல் பூரணத்துவத்திற்கும் குறைவானதாக இருக்கும். இருந்தபோதிலும், தேவன்

*உங்கள் விசுவாசத்தையும் கண்ணோக்கி, அதை உங்களுக்கு நீதியாக எண்ணுவார் (4:23, 24)!*

---

குறிப்புகள்

[1]இவ்வார்த்தைகள் குறிப்பாக யூதர்களுக்குக் கூறப்பட்டன, ஆனால் பொதுவான நடைமுறைப்பயன்பாடு ஏற்படுத்தப்படக்கூடும். [2]தந்தையர்கள் தினம் என்பது ஜூன் மாதமூன்றாம் ஞாயிற்றுக்கிழமையாகும், இதில் ஒவ்வொரு ஆண்டும் தந்தையர்கள் கனப்படுத்தப்படுவர், இது அமெரிக்க நாட்டில் தேசீய விடுமுறைநாளாகும். [3]"விசுவாசம் இதுதான்" என்பது பற்றி நன்கு அறியப்பட்ட வசனப்பகுதியை (எபிரெயர் 11:1) கொண்டுள்ள எபிரெயருக்கு எழுதிய நிருபத்தைப் பவுல் எழுதவில்லை என்று இங்கு யூகித்துக்கொள்ள வேண்டும். [4]Richard A. Batey, *The Letter of Paul to the Romans*, The Living Word Commentary (Austin, Tex.: R. B. Sweet Co., 1969), 61. [5]KJV வேதாகமத்தில் "quickens" என்றுள்ளது, இது "உயிர்ப்பித்தல்" என்பதற்கான பழைய ஆங்கில வார்த்தையாகும். [6]விசுவாசம் "அற்பமானதாக" (மத்தேயு 14:31; 16:8) அல்லது "பெரிதானதாக" (மத்தேயு 8:10, 26), "செத்ததாக" (யாக்கோபு 2:17, 26) அல்லது ஜீவனுள்ளதாகவும் இருக்கலாம். [7]"பவுலின்" என்றால், "பவுலுக்கே உரியதான" என்று அர்த்தப்படுகிறது. [8]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 210. *Elpis* என்பதன் வடிவங்கள் புதிய ஏற்பாட்டில் ஐம்பத்து மூன்று முறைகள் காணப்படுகிறது. இதில் முப்பத்தாறு முறைகள் பவுலின் எழுத்துக்களில் உள்ளன. [9]J. D. Thomas, *Romans*, The Living Word series (Austin, Tex.: Sweet Publishing Co., 1965), 37. [10]"பலவீனம்" என்பது உடல் பலவீனம் போன்றவற்றைக் குறிக்கிறதான *astheneo* என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, ஆனால் இவ்வார்த்தை எவ்வகையான பலவீனத்தையும் குறிக்க பயன்படுத்தப்பட முடியும். (Morris, 211, n. 84).

[11]Ibid., 211. [12]ஆதியாகமம் 25:1-6ம் வசனப்பகுதி, ஆபிரகாம் கேத்தூராள் என்பவள் மூலமாக மகன்களைப் பெற்றார் என்று கூறுகிறது. பிள்ளைகளைப் பெற இயலாத அளவுக்கு ஆபிரகாம் முதியவராக இருந்தார் என்றால், இது எவ்வாறு சாத்தியமாயிற்று? ஒருவேளை விவரங்கள் நாள்வரிசைமுறைப்படி அமையாதிருக்கலாம் மற்றும் ஆபிரகாம் தமது வாழ்வின் முந்தியபகுதியில் கேத்தூராள் மூலமாகப் பிள்ளைகளைப் பெற்றிருக்கலாம். ஒருவேளை, ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றுக்கொள்ளும்படி அவருக்குக் கிடைத்த தெய்வீக ஆசீர்வாதம், பிற்பாடு அவரைப் பிள்ளைகள் பெறக் கூடியவராகும்படி ஆக்கியிருக்கலாம். [13]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 92. [14]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 605. [15]*The Analytical Greek Lexicon*, 139. வாக்கியத்தின் எழுவாய் செயல்படுகையில் (சிலவற்றைச் செய்கையில்: உதாரணமாக, "அவன் சுமந்தான்") "செய்வினை" பயன்படுத்தப்படுகிறது. எழுவாய்மீது சில செயல்கள் செய்யப்படுகையில் (அவருக்குச் சிலசெயல்கள் செய்யப்படுகையில்: உதாரணமாக, "அவன் சுமக்கப்பட்டான்") "செயப்பாட்டுவினை" பயன்படுத்தப்படுகிறது. [16]ஒரு வார்த்தையானது "நான்காம் வேற்றுமை உறுபில்" இருக்கையில், அது தனக்கு முன்பாக முன்னிடைச்சொல் ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும். வசனப் பகுதியில் முன்னிடைச்சொல் காணப்படுவதில்லை என்றால், சந்தர்ப்பப்பொருளின் அடிப்படையில் முன்னிடைச்சொல் ஒன்று அளிக்கப்பட வேண்டும். [17]Morris, 212. [18]*The Analytical Greek Lexicon*, 328-29, 423-24. [19]G. Delling, *"plērophoreō,"* in Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament*, ed. Gerhard Kittel and Gerhard Friedrich, trans. Geoffrey W. Bromiley, abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 871. [20]Adapted from Donald Grey Barnhouse, *God's Remedy: Romans 3:21-4:25* (Grand Rapids, Mich.:

Wm. B. Eerdmans Publishing Co., 1954), 311-12. *பார்ன்ஹவுஸ், ஆபிராம் என்பதற்கு ரோமர் 4ன் மீதான நமது படிப்பில் நாம் பயன்படுத்தியுள்ளதில் இருந்து சற்றே மாறுபட்ட அர்த்தத்தைக் கொடுத்தார்.*

[21]Adapted from Charles R. Swindoll, *Coming to Terms with Sin: A Study of Romans* 1-5 (Anaheim, Calif.: Insight for Living, 1999), 74. [22]C. E. B. Cranfield, *Romans: A Shorter Commentary* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 96. [23]*3:23ஐப் பற்றிய நமது கலந்துரையாடலில் நாம் "அக்கிரமம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள ஒரு வார்த்தையைப்பற்றிப் படித்தோம். இங்கு சற்றே மாறுபட்ட வார்த்தையொன்று பயன்படுத்தப்பட்டுள்ளது: paraptomia (இது, pipto* ["*விழ*"] *என்பதில் இருந்து பெறப்பட்டு para என்பதினால் வலுவூட்டப்பட்டுள்ளது). இவ்வார்த்தை, "புறம்பே விழுதல்" என்பதைக் குறிக்கிறது.* [24]*தொடக்ககாலக் கிறிஸ்தவர்களால் பயன்படுத்தப்பட்ட "விசுவாசக்கூற்று" ஒன்றைப் பவுல் பயன்படுத்தினார் என்று பல எழுத்தாளர்கள் ஆலோசனை தெரிவிக்கின்றனர். விஷயம் இதுவா அல்லவா என்பதை நாம் அறிவதில்லை. நாம் அறிய வேண்டியதெல்லாம், ஏவுதல் பெற்ற மனிதர் ஒருவர் இதை எழுதியுள்ளார், ஆகவே இது கர்த்தரிடத்தில் இருந்து வந்ததாக இருக்க வேண்டும் என்பதே.* [25]*எடுத்துக்காட்டாக,* J. W. McGarvey and Philip Y. Pendleton, *Thessalonians, Corinthians, Galatians and Romans* (Cincinnati: Standard Publishing, n.d.), 330. [26]Charles Hodge, *Romans*, The Crossway Classic Commentaries (Wheaton, Ill.: Crossway Books, 1993), 125. [27]R. C. Bell, *Studies in Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1957), 41. [28]*"கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும்" பவுலின் போதனையைப் "புரட்டுவதற்கு" செல்லக்கூடிய தூரம் பற்றி நான் திகைப்படைகிறேன் (2 பேதுரு 3:15, 16ஐக் காணவும்).* [29]Douglas J. Moo, *Romans*, The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 165. [30]Ibid., 167.

[31]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 526. [32]Bell, 36-37. [33]Adapted from Harold T. Bryson, "Faith," *Illustrating Paul's Letters to the Romans,* comp. James F. Hightower (Nashville: Broadman Press, 1984), 31-32.